Asylum Support Partnership
help and advice
refugee action · North of England Refugee Service · Refugee Council · scottish refugee council · Welsh Refugee Council Cyngor Ffoaduriaid Cymru

October 2009 Tamil

# உள்வீட்டு வன்முறை - உங்களுக்கு உதவி தேவையா?

உள்வீட்டு வன்முறை என்பது ஒருவருக்கொருவர் உறவு உள்ள அல்லது கடந்த காலத்தில் உறவு இருந்துள்ள பெரியவர்களுக்கு இடையில், உள்வீட்டு உறுப்பினர்களுக்கு இடையில், அல்லது ஒரே வீட்டில்/குடியிருப்பில் வாழ்ந்து வரும் அல்லது வாழ்ந்து வந்துள்ள மற்ற நபர்களுக்கிடையில், அவர்களுடைய பாலினம் அல்லது பாலியல் நடத்தை எதுவாக இருப்பினும், ஏற்படும் ஏதேனும் அச்சுறுத்தும் நடத்தை, வன்முறை அல்லது தவறான செயல்களாகும்..

உள்வீட்டு வன்முறை எவரையும், எந்த நேரத்திலும் பாதிக்கலாம். ஆண் மற்றும் பெண் ஆகிய இருபாலரையுமே, அவர்கள் யாருடன் வாழ்ந்து வந்தாலும், அந்த நபருடன் அவர்களுக்கு எந்தவிதமான உறவு இருந்தாலும், அது பாதிக்கக்கூடும். இத்தகைய நடத்தையுடன், அதனால் பாதிக்கப்படுபவராகவோ அல்லது அதன் பார்வையாளராகவோ நீங்கள் வாழ்பவராக இருந்தால், உங்களால் உதவி கேட்க முடியும் என்பதை நீங்கள் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். அவர்களது குடிவரவு அந்தஸ்து என்னவாக இருந்தாலும், உள்வீட்டு வன்முறையிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது.

**வன்முறை பல வடிவங்களில் ஏற்படக்கூடும்:**

- **உடல்ரீதியான வன்முறை;** அடித்தல், உதைத்தல், ஆயுதம் அல்லது ஆயுதம் இல்லாமல் தாக்குதல், கழுத்தை நெரித்தல் மற்றும் கத்தியால் குத்துதல்
- **பாலியல் வன்முறை;** கற்பழிப்பு, கட்டாய பாலுறவு, ஆபாசக் காட்சிகளை பார்ப்பதற்கு அல்லது அதில் பங்கேற்பதற்கு கட்டாயப்படுத்தப்படுதல், கருத்தடை முறையை அணுகுவதற்கு தடை விதித்தல்
- **உணர்வுபூர்வ மற்றும் வாய்மொழி வன்முறை;** பயமுறுத்தல்கள் (கொலை மிரட்டல், குழந்தைகளை அணுக முடியாமல் தடுத்தல், அல்லது உங்களை வெளியேறும்படிச் செய்தல்), உடமைகளை சேதப்படுத்துதல், கூச்சலிடுதல், அச்சுறுத்தல், கட்டுப்படுத்துதல் (உதாரணமாக, ஆவணங்களை அணுக முடியாமல் தடுத்தல்), கொடுமைப்படுத்துதல், அவமானப்படுத்துதல், பெயரிட்டு அழைத்தல்
- **நிதிசார்ந்த வன்முறை;** உணவு அல்லது பணம் மறுக்கப்படுதல்

**நீங்கள் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால், இவற்றை நினைவில் கொள்ளவும்:**

- வன்முறைக்கு நீங்கள் உட்படுத்தப்படுவது உங்கள் தவறல்ல
- வன்முறை குறித்த புகார்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படும்
- நீங்கள் தகவலை மட்டும் கேட்டுப் பெறலாம், நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை



Asylum Support Partnership is a partnership project hosted by the British Refugee Council
British Refugee Council, (commonly called the Refugee Council) is a company limited by guarantee registered in England and Wales, [No 2727514] and a registered charity, [No 1014576].
Registered office: 240-250 Ferndale Road, London SW9 8BB, United Kingdom, VAT no: 936 519 988

OISC No: N200100132 · Community Legal Service

- உங்களை வன்முறைக்கு உட்படுத்துபவருக்கு எதிராக சட்டத்தால் உங்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும், உதாரணமாக சட்டபூர்வ நடவடிக்கை எடுத்தல்
- நீங்களும், உங்களுடன் குழந்தைகள் யாரேனும் இருந்தால், அவர்களும் உடனடியாக ஒரு பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்படலாம்
- நீங்கள் தரும் விவரங்கள் இரகசியமாக வைக்கப்படுவதுடன், உங்கள் ஒப்புதல் இன்றி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது
- உங்களால் தனியாக அடைக்கலத்திற்கு விண்ணப்பிக்க முடியும் மற்றும் உங்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, யூகே எல்லை முகமையிடமிருந்து (UK Border Agency - UKBA) நீங்கள் தொடர்ந்து உதவி பெறலாம். ஏற்கனவே உதவி பெறுபவர்களுக்கு, உள்வீட்டு வன்முறை தொடர்பான பலமான பாதுகாப்புக் கொள்கையை UKBA கொண்டுள்ளது.

**வன்முறை குறித்து கீழ்க்கண்டவர்களிடம் நீங்கள் முறையிடலாம்:**

- உள்வீட்டு வன்முறை உதவியழைப்பு எண், காவல்துறை, உங்கள் மருத்துவர், சுகாதார வருகையாளர், உள்ளூர் உதவிக் குழு
- உங்கள் பகுதியிலுள்ள வட இங்கிலாந்து அகதி சேவை (North of England Refugee Service), அகதி நடவடிக்கை (Refugee Action), அகதிக் குழு (Refugee Council), ஸ்காட்லாந்து அகதிக் குழு (Scottish Refugee Council) அல்லது வேல்ஸ் அகதிக் குழு (Welsh Refugee Council) போன்ற ஒரு அகதி முகமை.
  - நீங்கள் விரும்பினால், ஒரு பெண் பணியாளர் மற்றும்/அல்லது ஒரு பெண் மொழிபெயர்ப்பாளருடன் முறையிடுவதற்கு கேட்கலாம்.
  - நீங்கள் தரும் விவரங்கள் இரகசியமாக வைக்கப்படும்.
  - நீங்களோ அல்லது உங்கள் குழந்தைகளோ உடனடி உடல்ரீதியான வன்முறை அபாயத்தில் இருந்தால், இந்த முகமைகள் வேறு யாரிடமாவது உங்கள் நிலை பற்றி கூற வேண்டியிருக்கலாம்.

**உதவிக்கு கீழ்க்கண்டவற்றைத் தொடர்பு கொள்ளவும்:**

**இங்கிலாந்து மற்றும் வேல்ஸ (England and Wales): இலவச தொலைபேசி 24 மணி நேர தேசிய உள்வீட்டு வன்முறை உதவியழைப்பு எண் (Freephone 24 hour National Domestic Violence Helpline) 0808 2000 247**
**ஸ்காட்லாந்து (Scotland): ஸ்காட்லாந்து உள்வீட்டு வன்முறை உதவியழைப்பு எண் (Scottish Domestic Abuse Helpline) 0800 027 1234**
நீங்கள் ஆங்கிலம் பேசாதவராக இருந்தால், நீங்கள் என்ன மொழி பேசுகிறீர்கள் என்பதை தயவுசெய்து தெரிவிக்கவும். மொழிபெயர்ப்பாளர் சேவை கிடைக்கப்பெறும் வரையில் நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும், அல்லது நீங்கள் என்ன மொழி பேசுகிறீர்கள் என்பதையும் உங்கள் தொலைபேசி எண்ணையும் அளித்துவிட்டுச் செல்லலாம். ஆலோசகர் ஒருவரும் மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் உங்களைத் தொலைபேசியில் திரும்ப அழைப்பார்கள்.

**காவல்துறை (அவசர காலத்தில்) (Police - emergency) 999**

## அகதி முகமைகளின் தொடர்பு விவரங்கள்:

**North of England Refugee Service Head Office (North East)**
www.refugee-org.uk
19 The Bigg Market
Newcastle NE1 1UN
Tel: 0191 222 0406

**Refugee Action Head Office (East Midlands, North West, South Central, South West)**
www.refugee-action.org.uk
The Old Fire Station
150 Waterloo Road
London SE1 8SB
Tel: 020 7654 7700

**Refugee Council Head Office**
**(London, East of England, West Midlands, Yorkshire & Humberside)**
www.refugeecouncil.org.uk
http://languages.refugeecouncil.org.uk
240-250 Ferndale Road
London SW9 8BB
Tel: 020 7346 6700

**Scottish Refugee Council Head Office (Scotland)**
www.scottishrefugeecouncil.org.uk
5 Cadogan Square
(170 Blythswood Court)
Glasgow G2 7PH
Tel: 0141 248 9799
Freephone: 0800 0856 087

**Welsh Refugee Council Head Office (Wales)**
www.welshrefugeecouncil.org
Phoenix House
389 Newport House
Cardiff CF24 1TP
Tel: 02920 489 800